209—

இசைப் பள்ளிக் கட்டடம்

***4785—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட அரசு இசைப் பள்ளிக்குத் தனியாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட அரசு இசைப் பள்ளி, ஜவகர் சிறுவர் மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கலைப் பண்பாட்டு மைய வளாகத்திற்கென, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன்கூடிய கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டுள்ளது என்பதையும், பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தன்மை என்பது blood*–ல் இருக்க வேண்டும் என்று சொல்வார்கள். கேட்பவர்கள் யாராக இருந்தாலும் பரவாயில்லை என்று கொடுக்கிற மனம் படைத்த, ஈகைப் பண்பு மிக்க தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் தூய உள்ளத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கேள்வியை எழுப்பியவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11–05

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

புதிய நகர்ப்புற குடிநீர்த் திட்டங்கள், திண்டுக்கல், தஞ்சாவூர், காரைக்குடி, சிவகாசி நகராட்சிகளைத் தரம் உயர்த்துதல் முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை உயர்ந்த அளவில் நிறைவேற்றிக் கொடுப்பதும், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதும் உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமை என்றாலும், மாநில அரசுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நல்ல சுற்றுப்புறச் சூழலை ஏற்படுத்துவதிலும், பொதுச் சுகாதாரத்தைப் பராமரிப்பதிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதிலும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் ஒன்றான இராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில் 3.80 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் எனது